1971 ஜூலை 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கேள்வி திருச்சி மாவட்டத்தைப் பற்றியது என்றாலும், பத்மநாபபுரம் சம்பந்தமாக, அதற்கான கண்ட்ராக்டர் ஒப்பந்தம் முடிந்து விட்டது. வேலை சீக்கிரமே துவங்கப் போகிறார்கள்.

Relief to victims in fire accidents in Mylapore area

* 305 Q.—THIRU A. SWAMIDHAS: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether financial help was offered to the victims of the fire accidents in Mylapore area in Madras city about the 10th May 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: 10-5-1971 அன்று சென்னை மைலாப்பூர் வட்டாரத்தில் தீ விபத்து ஏதும் ஏற்படவில்லை. மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் 9-5-1971 அன்று ஒரு தீ விபத்தும், 11-5-1971 அன்று மற்றொரு தீ விபத்தும் ஏற்பட்டன.

(இ) 9-5-1971 அன்று மாலை 1 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஒரு தீவிபத்து ஏற்பட்டது. 323 குடிசைகள் அழிந்து போயின. 737 குடும்பங்கள் பாதிக்கப் பட்டன. இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண மாக ரூ. 33,680 வரை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மற்றொரு தீ விபத்து 11-5-1971 அன்று மாலை 2 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஏற்பட்டது. அதில் 85 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 185 குடும்பங்கள் வீடிழந் தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 8,080 வரை உதவித் தொகை யாக வழங்கப்பட்டுள்ளது.

சென்னி மலையிலுள்ள சாயப்பட்டறை

* 306 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்தி சங்கத் திற்குச் சொந்தமான சாயப்பட்டறையில் நாளொன்றுக்கு எத்தனை பிரிநூலுக்கு சாயம் போடப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்திற்குச் சொந்தமான சாயப்பட்டறை யில் நாளொன்றுக்கு 20,400 முதல் 23,800 பிரிகள் வரை (Hanks) சாயம் போடப்படுகிறது. அதாவது நாளொன்றுக்கு 3-லிருந்து 3½ பேல்கள் வரை (சிப்பம்) சாயம் போடப்படுகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினு நான் கொடுத்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும், அந்த

பட்டறையில் ஒரு நாளைக்கு 3½ பேல் என்று அமைச்சர் தெரிவித்தார்கள். 3½-க்கும் அதிகமாகச் செய்யப்பட்டதாக ஆடிட் ரிபோர்டில் குறிப்பிட்டிருக்கிறது. அப்படி குற்றச்சாட்டு இருந்தால், நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட குற்றச் சாட்டு பற்றித் தகவல் இல்லை.

Prices of yarn supplied to Handloom Industry.

* 307 *Q.*—THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state the steps taken by the Government to reduce the prices of the yarn supplied to the Handloom Industry in the State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைத்தறித் தொழிலுக்கு வழங்கப்படுகிற நூலிழையின் விலைகளைக் குறைக்க அரசு கீழ்க் கண்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது :—

(1) நூலிழையின் விலையைக் குறைப்பது குறித்து ஆய்வு செய்யவும், பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஆலோசனை கூறவும் அரசு சார்புள்ளவர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்பட்டது.

(2) பரவலாக்கப்பட்ட துறைக்கு சிக்கெடுக்கப்பட்ட பருத்தி நூலிழையை (carded cotton yard) வழங்குவதற்காக, பருத்தி நூலிழைச் சிறப்புத் தொகுப்புத் திட்டம் இந்திய அரசால் கொண்டு வரப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி : கைத்தறி நெசவாளர்களுக்கு சப்ளை செய்யப்படும் நூல் விலை குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வெகு காலமாக இருந்தாலும், இன்னும் கமிட்டி ஸ்டேஜில் தான் இருக்கிறது. குறைந்த பட்சம் அரசுக்குச் சொந்தமான கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும் நூலை குறைந்த விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் பொறுத்தவரையில் சங்கடம் இல்லை. நம்முடைய கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து அவ்வப்போது விலை நிர்ணயம் செய்து கொடுக்கப்படுகிறது. இங்கே கேட்டிருக்கும் பிரச்சினை கூட்டுறவுக்கு வராத நெசவாளர்கள் குடும்பங்களுக்குத் தேவையான நூல்கள் பற்றியது. அதன் விலை ஏறும்போது, என்ன செய்ய முடியும் என்பதைப் பார்த்து, நூற்பாலைச் சொந்தக்காரர்களை அழைத்து பேசி குறைந்த விலைக்குக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. நிரந்தரமாக கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் விலையைக் குறைக்க, வரிச் சலுகை கொடுத்தால் எந்த விலை அளவில் குறையும் என்பது யோசனையில் இருக்கிறது.

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கைத்தறியாளர்களுக்கு உபயோகமாகும் நூல், " ஹாங்க் யார்ன் " என்று தனியாக உற்பத்தி செய்யப்படுகிறது. ஆகையால் அந்த